**REVISED**

**செ. கு. எண்: 090** **நாள் : 26.09.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

# அறிக்கை - 26.9.2015

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், சித்தோடு, காட்டுப்பாளையம் பகுதியைச் சேர்ந்த திரு. மாரப்ப கவுண்டர் என்பவரின் மகன் துரைசாமி, 1.6.2015 அன்று சத்தியமங்கலம் வட்டம், தொட்டகாஜனூர் பகுதி அருகே காட்டுப் பன்றி தாக்கியதில் பலத்த காயமடைந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 8.6.2015 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை வனச்சரகம், மானார் பிரிவு, பில்லூர் சுற்று நெல்லித் துறை காப்புக் காடு அருகே, 4.6.2015 அன்று மஞ்சூர் எமரால்டு நேரு நகர் பகுதியைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் என்பவர் காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், கக்குச்சி கிராமம், திருச்சிகடி பகுதியைச் சேர்ந்த திரு. கிருஷ்ணன் என்பவரின் மகன் கனகராஜ் 5.6.2015 அன்று காட்டெருமை தாக்கியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், உடுமலைபேட்டை வட்டம், ராவணபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னக்கூழையன் என்பவரின் மகன் மாரியப்பன் 9.6.2015 அன்று மாவடப்பு காட்டுப் பகுதி அருகே காட்டு யானை தாக்கியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், கூடலூர் கிராமம், குசுமிகரி பகுதியைச் சேர்ந்த திரு. டோமி என்கிற செபாஸ்டின் 3.7.2015 அன்று ஸ்ரீமதுரை கிராமம் அருகே காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம், சேரங்காடு கிராமத்தைச் சேர்ந்த திருமதி ஞானதிலகம் என்பவர் 16.6.2015 அன்று வீட்டினருகே கரடி தாக்கியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன்.

காட்டுப் பன்றி தாக்கி உயிரிழந்த துரைசாமி, காட்டு எருமை தாக்கிய உயிரிழந்த கனகராஜ், காட்டு யானைகள் தாக்கி உயிரிழந்த சுப்பிரமணியம், மாரியப்பன். டோமி என்கிற செபாஸ்டின் ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், கரடி தாக்கி காயடைந்த திருமதி ஞானதிலகத்திற்கு 50,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வனத் துறை மூலம் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**